( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

CC No. 58/2024

Name :Pushparaj **P.W.1**
Father/Husband Name : சைமன்
Caste :
Calling :
Religion :
Age :
Date : 25-03-2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.03.2025

**முதல் விசாரணை – சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.**

1. நானும் எதிரி பிரசாந்த் என்பவரும் சென்சிபல் நிறுவனத்தில் ஒன்றாக பணிபுரிந்து வந்தோம். அவருக்கு அலுவலகத்தில் பணி இல்லை என்று சுமார் 7 வருடங்களுக்கு முன்னர் எங்கள் அலுவலகத்தில் இருந்து பணியில்இருந்து நீக்கி விட்டார்கள். சிறு நாட்கள் கழித்து தனக்கு குடும்ப பிரச்சனை உள்ளதாகவும் அதை சரி செய்ய வங்கியில் கடன் வாங்கி தனக்கு தர வேண்டியும் மேலும் அந்த பணத்தை சிறு நாட்களுக்குள் கொடுத்து விடுவதாக உறுதி அளித்தார். முதலில் என்னால் முடியாது என்று சொன்னேன் ஆனால் பிரசாந்த் குடும்பத்தில் அவரால் பணத்தை கொடுக்கவில்லை என்றாலும் அவர் குடும்பத்தார் பணத்த கொடுத்து விடுவதாக உறுதி அளித்தார்கள் அதன்பின்னர் பிரசாந்த் உதவி உடன் தான் HDFC, RBL Axis மற்றும் ICICI வங்கிகளை அணுகி மொத்தம் ரூ. 37 லட்சத்திற்கு கடன் வாங்குவதற்கு விண்ணப்பித்து இருந்தேன். இதர செலவுகள் போக மொத்தம் ரூ. 35 லட்சம் பணம் தான் கடனாக கிடைக்கப்பெற்றது. எனக்கு வங்கியில் இருந்து கடன் தொகை செலுத்தப்பட்ட நாளிலேயே பிரசாந்தின் வங்கி கணக்கிற்கு பரிவர்த்தனை செய்து விட்டேன். **என்னுடைய வங்கி கணக்கில் இருந்த பிரசாந்த் வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்ட வங்கி பரிவர்த்தனை கணக்கை தாக்கல் செய்கிறேன் அது ம.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அவரர் உறுதி அளித்ததின் அடிப்படையில் இரண்டு வருடங்கள் கடன் கணக்கு மாத EMI தொகையை என்னுடைய வங்கி கணக்கிற்கு அனுப்பி வந்தார். **எதிரியின் வங்கி கணக்கு எண்ணை தாக்கல் செய்கிறேன் அது ம.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. இரண்டு வருடங்கள் கழித்து எந்த பணமும் அவர் அனுப்பவில்லை. பிரசாந்த் என்னுடைய வங்கி கணக்கிற்கு EMI தொகை செலுத்திய விவரம் ம.சா.ஆ. 1 ஆவணத்தில் உள்ளது. பிரசாந்த் 1 , 2 மாதங்களில் பணத்தை செலுத்திவிடுவதாக சொலலியும் அவர் செலுத்தவில்லை. என்னாலும் EMI தொகையை செலுத்தவில்லை அதனால் வங்கி தரப்பில் இருந்து எனக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தார்கள். வங்கி ஊழியர்கள் வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்ய ஆரம்பித்தார்கள் அதனால் என் மனைவி மனஉளைச்சலுக்கு ஆளாகி அவரைுடைய பெற்றோரர் வீட்டிற்கு சென்றுவிட்டார். 25/11/2022 அன்று நான் கானத்தூர் காவல் துணை ஆணையரிடம் இது குறித்து புகார் கொடுத்தேன் புகார் நகலை தாக்கல்செய்கிறேன். **25/11/2022 தேதியிட்ட புகார் நகல் ம.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பிறகு நான் கொடுத்த புகாரை கேளம்பாக்கம் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

3. இருவரையும் விசாரணை செய்து ஆவணங்களை பரிசீலினை செய்தார்கள். விசாரணையில் எதிரி பிரசாந்த் ரூ. 13,50,000/- திருப்பி கொடுத்து விடுவதாக உறுதி அளித்தார். மாதம் ரூ. 50 ஆயிரம் கொடுத்து விடுவதாகவும் உறுதி அளித்தார். எதிரி காவல் நிலையத்தில் எழுதி கொடுத்த கடிதத்தின் நகலை தாக்கல் செய்கிறேன். **அது ம.சா.ஆ 4 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** அதற்கு பிரசாந்தின் தந்தையும் மாமாவும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தார்கள். அதன் பின்னர் இரண்டு மாதங்கள் ரூ. 50 ஆயிரம் செலுத்தினார். 3 வது மாதத்தில் இருந்து பணம் அனுப்பவில்லை. அதன் பின்னர் நான் மீண்டும் காவல் நிலையம்சென்று இது குறித்து தகவல் தெரிவித்தேன். ஆனால் பிரசாந்த் காலம் தாழ்த்தி வந்தார். நான் மீண்டும் கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். **25/02/2023 அன்று கொடுக்கப்பட்ட புகாரின் நகலை தாக்கல்செய்கிறேன். அது ம.சா.ஆ. 5 ஆக குறியீடு யசயெப்ப்படுகிறது**. நான் கொடுத்த புகாருக்கு மனு ஏற்பு ரசீது காவல் நிலையத்தில் வழஙங்கப்பட்டது. **மனு ஏற்பு ரசீது எண். 197/2023 தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ.6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

**4.** நான் கொடுத்த புகாருக்காக எதிரி பிரசாந்த் சென்னை உயர்நீதிமன்றத்தில் முன் ஜீாமுன் பெற மனு தாக்கல் செய்தார். நான் காவல் நிலையத்தல் கொடுத்த புகாரிதன் நிலையயை கேட்க சென்றபோது காலம் தாழ்த்தி வந்தார்கள். நான் ஒரு நாள் சிஎஸ்ஆர்

எண்ணை வைத்து இணையதளம் மூலமாக சோதனை செய்தபோது நான் கொடுத்த புகார் Action dropped என்று முடிக்கப்பட்டு இருந்தது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் Crl.O.P No. 14485/2023 என்ற வழக்கு பிறப்பித்த உத்தரவின் நகலை தாக்கல் செய்கிறேன். **அது ம.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. CCTNS மூலம் மனு ஏற்பு ரசீது விவரத்தை பதிவிறக்கம் செய்து தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் காவல் நிலையத்தில் மீண்டும் இது குறித்து கேட்க சென்றபோது நீதிமன்றத்தை அணுகுமாறு சொல்லிவிட்டார்கள் அதன் பின்னர் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். நான் பிரசாந்த்காக வாங்கி கொடுத்த கடனை என்னுடைய செல்டில்மெண்ட் பணம் வீட்டில் உள்ளவர்களின் நகையை வைத்து பெற்ற பணம் மற்றும் வெளி நபர்களிடம் வாங்கிய பணத்தை கொண்டு கடனை அடைத்து விட்டேன். எதிரி எனக்கு கொடுக்க வேண்டிய ரூ.12,50,000/- திரும்ப கொடுக்க வேண்டும் என்றும் அவருக்கு உரிய தண்டனை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன். எதிரி என்னை ஏமாற்றியதால் கடந்த 5 வருடகாலமாக மன உளைச்சல் ஏறபட்டுவருகிறேன் மேலும் என் குடும்பத்தில இதனால் பிரச்சனை ஏற்பட்டு வருகிறது.

S/d- N.Anupriya, 25.03.2025.

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

DM cum JM/TPR.